14.09.2017

தினமணி

## சூரியகாந்தியில் புகையிலைப் புழு கட்டுப்பாடு!



திருநெல்வேலி: சூரியகாந்தி பயிரில் தலைத்துளைப்பான், புகையிலைப் புழு கட்டுப்பாடு முறைகளைப் பின்பற்றி மகசூல் இழப்பைத் தடுத்து அதிக லாபம் பெறலாம் என, வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

**தலைத் துளைப்பான்:** பயிரின் தலைப் பகுதியில் மட்டும் துளையிடும் புழு என்பதால் தலைத் துளைப்பான் எனப்படுகிறது.

அறிகுறி: பயிரில் தலைப் பகுதியின் உள்ளே துளைகள் காணப்படும். நன்றாக வளர்ந்த விதைகளின் மீது புழுக்கள் உண்டதற்கான அறிகுறி காணப்படும். பூஞ்சான் உருவாகி, தலைப்பகுதி அழுகத் தொடங்கும். வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் புழுக்கள் இலைகளை அதிகமாக உண்ண ஆரம்பித்து பின்னர் தலைப் பகுதியைத் துளைக்கும்.

**பூச்சி விவரம்**: முட்டைகள் உருளை வடிவத்தில், பால் வெள்ளை நிறத்தில் காணப்படும். தனித்தனியே முட்டை இடும். புழு பச்சை நிறத்திலிருந்து பழுப்பு நிறமாக தோற்றமளிக்கும். உடலின் மீது அடர் பழுப்பு சாம்பல் நிற வரிகளும், அடர், மங்கிய நிற வளையங்களும் காணப்படும். கூட்டுப்புழு பழுப்பு நிறத்தில் மண், இலை, காய், பயிர், குப்பைகளில் காணப்படும். பூச்சியின் இறக்கைகள் இளம் புகை வெள்ளை நிறத்துடன், அகலமான கருப்பு நிற வெளி விளிம்புடன் காணப்படும். இளம் பழுப்பு

கலந்த மஞ்சள் நிறத்தில், தடித்து காணப்படும். முன் இறக்கைகள் ஆலிவ் பச்சை நிறத்திலிருந்து இளம் பழுப்பு நிறத்துடன், அடர் பழுப்பு நிற வட்ட வடிவ புள்ளி நடுவிலும் காணப்படும்.

கட்டுப்பாடு: சூரியகாந்தியில் ஊடு பயிராக பச்சைப் பயிறு, உளுந்து, கடலை, சோயாபீன் பயிரிடுவதன் மூலம் தலைத்துளைப்பானைக் கட்டுப்படுத்தலாம். 3-க்கு 4 வரிசை என்ற அளவில் மக்காச்சோளத்தை பயிரைச் சுற்றி விதைக்கலாம். பொறிப் பயிர்களாக ஏக்கருக்கு துலக்கமல்லி 50 செடிகள் என்ற அளவில் விதைக்கலாம். ஏக்கருக்கு 4 இனக் கவர்ச்சிப் பொறிகள் வைத்தும் கட்டுப்படுத்தலாம். விளக்குப்பொறி வைத்தும் கட்டுப்படுத்தலாம்.

இரை விழுங்கிகளான காக்சி நெல்லி டிஸ், கிரைசோபெர்லா கார்னியா 1 புழு என்ற அளவில் வயலில் வெளியிடலாம்.

ஒட்டுண்ணிகளான டிரைக்கோகிராமா பிரக்கான் வகைகள், கேம்போலெட்டிஸ் வகைகளை வயலில் வெளியிடலாம். தகுந்த பூச்சிக்கொல்லி மருந்துகளை மாலை நேரங்களில் தெளிக்கலாம். 5 சதவீத வேப்பெண்ணெய் அல்லது 5 சதவீத வேப்பங்கொட்டைச் சாற்றை முட்டை இடும் முன் தெளிக்க வேண்டும்.

புகையிலைப் புழு அறிகுறி: இவ்வகை பூச்சிகள் இளம் இலைகள், கிளைகள், இதழ்களை உண்ணும். பின்னர் வயல் முழுவதும் பரவி, இலைகள் உதிரும். வளர்ந்த விதைகளை புழுக்கள் உண்ணும்.

**பூச்சியின் விவரம்**: இதன் முட்டை கூட்டமாக காணப்படும். தங்க நிறம் கலந்த பழுப்பு நிறத்தில் தோற்றமளிக்கும். புழு இளம் பச்சை நிறத்துடன் அடர் குறிகளுடன் காணப்படும். இளம் நிலையில் தீவிரமாக உண்ணும்.

பூச்சியின் முன் இறக்கைகள்: பழுப்பு நிறத்தில், அலை போன்ற வெள்ளை நிற குறிகளுடன் காணப்படும். பின் இறக்கைகள் வெள்ளை நிறத்தில், விளிம்புகளில் பழுப்பு நிற திட்டுக்களுடன் காணப்படும்

**கட்டுப்பாடு:** புகையிலைப் புழு தாக்கிய முட்டைகளை சேகரித்து, அழிக்க வேண்டும். பரிந்துரைக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை மாலை 4 மணிக்குப் பிறகு தெளிக்க வேண்டும். ஏனெனில், அப்போதுதான் தேனீக்கள் வரவு குறைவாக இருக்கும். பயிர்களுக்கு வளர்ச்சி ஊக்க மருந்து தெளித்த நாளில் பூச்சிக்கொல்லியை தெளிக்க வேண்டும். இத்தகைய தொழில்நுட்பமுறைகளைப் பின்பற்றி மகசூல் இழப்பைத் தடுக்கலாம்.

## ஏழைகளின் உணவு குதிரைவாலி...!



அரக்கோணம்: வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையுடைய பயிரான குதிரைவாலி, தண்ணீர் தேங்கினாலும் தாக்குப்பிடிக்கக் கூடியது. இது மானாவாரியில் அதிகளவு பயிரிடப்படுகிறது. 40 சதவீத புரதசத்து கொண்டது. ஏழை மக்கள் பெரும்பாலானோரின் உணவாக குதிரைவாலி தானியம் விளங்குகிறது. இதுபோக மது தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் தமிழ்நாடு, மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம் ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் மற்றும் பிகார் போன்ற மாநிலங்களில் அதிகளவு பயிரிடப்படுகிறது. குதிரைவாலி வெப்பம் மற்றும் வெப்பம் சார்ந்த காலநிலைகளில் நன்கு வளரும். மற்ற பயிர்களைக் காட்டிலும் மாறுபட்ட சீதோஷ்ண நிலைகளையும் தாங்கி வளரக்கூடியது. இது தண்ணீர் தேங்கிய ஆற்றுப் படுகை, களி மண்நிலங்களில் நன்கு வளரும். கற்கள் நிறைந்த மண் மற்றும் குறைந்த சத்துக்கள் உடைய மண் சாகுபடிக்கு குதிரைவாலி ஏற்றதல்ல.

**பயிரிடும் முறை:** குதிரைவாலியை பயிரிட விரும்புவோர் முதலில் நிலத்தை அதற்கேற்றாற்போல் தயார்படுத்துவது மிக முக்கியம். இரண்டு முறை நிலத்தை கலப்பை கொண்டு உழுது சமன்படுத்தி விதைப்படுக்கையை தயார்படுத்த வேண்டும். பருவமழை தொடங்கியவுடன் 15 நாள்களுக்கு விதைக்க வேண்டும், விதைகளை தெளித்தல் அல்லது பார்பிடித்து 3-4 செ.மீ. துளையிட்டு விதைக்கலாம். ஒரு ஹெக்டேருக்கு 8 முதல் 10 கிலோ விதை தேவைப்படும். வரிசைக்கு வரிசை இடைவெளியாக 25 செ.மீ. விடலாம்.

ஒரு ஹெக்டேருக்கு 5 முதல் 10 டன்கள் தொழு உரம் இடலாம். தழை, மணி மற்றும்

சாம்பல் சத்தை கிலோ ஒரு ஹெக்டேருக்கு 40:30:50 என்ற விகிதத்தில் இடவேண்டும். விதை விதைத்த பிறகு உரம் முழுவதையும் போட வேண்டும். நீர்பாசனப் பகுதிகளில் பாதியளவு தழைச்சத்தை விதைத்த 25 முதல் 30 நாள்களுக்கு பிறகு இடலாம்.

பொதுவாக, குதிரைவாலிக்கு நீர்ப்பாசனம் தேவையில்லை வறண்ட சூழ்நிலை நிலவினால் ஒருமுறை நீர்ப்பாசனம் பூங்கொத்து வரும் தருனத்தில் அளிக்க வேண்டும். அதிகப்படியான மழை பொழியும் காலங்களில் வடிகால் வசதி ஏற்படுத்தி நீரை வெளியேற்ற வேண்டும்.

வயலில் விதைத்த 25 முதல் 30 நாள்கள் வரை களை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் இரு முறை களை எடுத்தல் போதுமானது. கைகொத்து அல்லது சக்கர கொத்தி மூலம் களை எடுக்கலாம். பல்வேறு நோய்கள் குதிரைவாலியைத் தாக்கக்கூடும். அவற்றில் பூஞ்சாண காளாண் நோய், கரிப்பூட்டை நோய், துருநோய் ஆகியன முக்கியமானவை.

பூஞ்சான் காளான் நோயால் பாதிக்கப்பட்ட செடியைப் பிடுங்கி எறிவதன் முலம் கட்டுப்படுத்தலாம். விதைகளை ஆரோக்கியமான செடிகளில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். கரிப்பூட்டை நோயும் ஒரு வகை பூஞ்சான் காளான் நோயாகும். இதை விதை நேர்த்தி மூலம் அக்ரோசன் 2.5 கிராம் ஒரு கிலோ விதைக்கு என்ற விகிதத்தில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். சுடு தண்ணீரில் நனைத்தும் (55 செல்சியஸ் 7 முதல் 12 நிமிடங்களில்) விதைக்கலாம். துரு நோயும் பூஞ்சான் காளான் நோயே ஆகும். டைத்தேன் எம்-45, 2 கிலோவை 1000 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

குதிரைவாலியை பொருத்தவரை பூச்சி கட்டுப்பாடும் அவசியம். தண்டு துளைப்பான் பூச்சியை திமெட் குருணை 15 கிலோ ஒரு ஹெக்டேருக்கு என்ற விகிதத்தில் இடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இதில், அறுவடை மற்றும் கதிரடித்தல் பொறுமையாக செய்தல் முக்கியம். கதிர்களை காளைகளின் கால்களில் போட்டு நசுக்கி தானியங்களைப் பிரித்தெடுக்கலாம்.

மகசூல், சராசரியாக ஒரு ஹெக்

டேருக்கு 400 முதல் 600 கிலோ தானியமும், 1,200 கிலோ வைக்கோலும் கிடைக்கும். மேம்படுத்தப்பட்ட சாகுபடி முறைகளால் 10 முதல் 12 குவிண்டால் வரை கூடுதல் தானிய மகசூல் பெறலாம்.

## மருத்துவக் குணம் நிறைந்த மணத்தக்காளி!



திருநெல்வேலி: தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்வதில் ஆர்வமுடைய விவசாயிகள் மருத்துவக் குணம் நிறைந்த மணத்தக்காளி சாகுபடி செய்து நல்ல வருவாய் ஈட்டலாம் என, தோட்டக்கலைத் துறை அறிவித்துள்ளது.

பயன்கள்: மணத்தக்காளி வாத நோய், வீக்கம், இருமல், ஆஸ்துமா, மார்புச்சளி நோய், காயம், அல்சர், வயிறுப் பொருமல், வயிறு மந்தம், ஈரல் வீக்கம், காதுவலி, கண் மருத்துவம், வாந்தி, இதய நோய், தொழு நோய், தோல் நோய்கள், காய்ச்சல், மண்ணீரல் வீக்கம், நச்சுத் தடை மருந்து, ஒவ்வாமை, செரிமானம், குடலிளக்கி, புத்துணர்ச்சி, மனதை அமைதிப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு மருந்தாகவும், சத்து மருந்தாகவும் முழுத் தாவரமும் பயன்படுகிறது.

**மண், காலநிலை:** வெப்ப, மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் 2,000 மீ குத்துயரத்தில் மணத்தக்காளி நன்கு வளரும். அங்ககத் தன்மை அதிகமுள்ள மண் ஏற்றது. வறண்ட, கற்கள் நிறைந்த, மணற்பாங்கான அல்லது ஆழமான மண்ணில் நன்கு வளரும். ஈரப்பத மணலில் களையாக வளரும். வெப்ப, மிதவெப்ப மண்டல வேளாண் காலநிலை மண்டலத்தில் சாகுபடி செய்யலாம்.

**நாற்றங்கால், நடவு:** விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. நாற்றுகள் நாற்றங்காலிலிருந்து 30 முதல் 45 நாளில் பயிர் 8 முதல் 10 செமீ உயரம் அடைந்தவுடன் விளைநிலங்களில் நடவு செய்யப்படுகிறது. மழைக் காலத்தில் வரப்புகளிலும், வெயில் காலத்தில் வாய்க்காலிலும் நடவு செய்யப்படுகிறது. 30-க்கு 90 செமீ இடைவெளியில் பயிரின் படரும் தன்மையைப் பொறுத்து நடவேண்டும். வெயில்

காலங்களில் நட்ட பயிருக்கு தாற்காலிக நிழல் 4 நாளுக்கு அளிக்க வேண்டும்.

**உர மேலாண்மை**: நிலத்தை தயாரிக்கும்போது தொழுவுரம் ஹெக்டேருக்கு 20 முதல் 25 டன் அளிக்க வேண்டும். தழை, மணி, சாம்பல் சத்து ஹெக்டேருக்கு முறையே 75: 40: 40 என்ற விகிதத்தில் அளிக்க வேண்டும். சாம்பல் சத்தை அடியுரமாகவும், தழை, மணிச்சத்தை 2 அல்லது 3 பிரிவுகளாகவும் அளிக்க வேண்டும்.

**நீர் மேலாண்மை:** நாற்றங்கால், பயிருக்கு வார இடைவெளியில் பாசனம் செய்ய வேண்டும். பயிரில் பூ அரும்பும் வரை பாசனம் செய்ய வேண்டும்.

**ஊடுசாகுபடி:** களை எடுத்த பின், மேலுரம் அளித்த பின் பயிருக்கு மண் அணைக்க வேண்டும். வெயில் காலங்களில் 3 முதல் 4 நாளுக்கு ஒருமுறையும், காய்ப் பருவத்தில் ஒருநாள் விட்டு ஒருநாளும் பாசனம் செய்ய வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு:** இப்பயிரைத் தாக்கும் தண்டுத் துளைப்பான், மாவுப்பூச்சி, இலை பிணைக்கும் புழு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மிதமான பூச்சிக்கொல்லி தெளித்தால் போதும். வேர் முடிச்சுப் புழு, வாடல் நோய் ஆகியவற்றை நிலத்தை சுத்தப்படுத்துதல், பயிர் சுழற்சி, பயிர் எச்சங்களை எரிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**அறுவடை, மகசூல்:** மண், காலநிலையைப் பொறுத்து மணத்தக்காளி 4 முதல் 6 மாதங்களில் அறுவடைக்குத் தயாராகும். மணத்தக்காளி செடியைச் சேகரித்து நிழலில் உலர்த்த வேண்டும்.

**மகசூல்:** ஹெக்டேருக்கு 12 முதல் 20 டன் மூலிகை கிடைக்கும்.